சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 15 வியாழக்கிழமை (31-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 237

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

# இலங்கையின் படை நடவடிக்கை கச்சதீவு கடற்பகுதியில் அதிகரிப்பு!

## இந்தியா ஆட்சேபம்

கொழும்பு, ஜூலை 31

கச்சதீவுப் பகுதியில் இலங்கை கடற்படையின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையிட்டு இந்தியா கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

கச்சதீவில் இலங்கைப் படையினர் முகாம் அமைத்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

கச்சதீவின் வடக்கு தெற்குப் பகுதிகளில் கண்காணிப்புக் கோபுரங்களை அமைத்து வருகின்றனர் என்றும்—

கச்சதீவில் வடகிழக்குக் கரையில் இலங்கைக் கடற்படைக்கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன என்றும் — வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

விமானங்கள், ஹெலிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இங்கு செய்த ஒப்பந்தங்கள் போல அங்கு செய்த ஒப்பந்தமும் காற்றிலே...!

## பஸ்ஸை கடத்தி வந்து படையினர் மீது தாக்கு!

### மட்டக்களப்பு பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 31

மட்டக்களப்பு மாவட்டம் மைலங்கராச்சி என்னும் இடத்தில் வீதித் தடை ஒன்றில் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த துருப்பினர் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

மூன்று படையினரும், ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்தனர்.

புலிகள் பஸ் ஒன்றைக் கடத்தி வந்து இத்தாக்குதலை நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் தெரிவித்தது. (இ-3)

# மாணவர் மீது நேற்று பொலீஸார் தடியடி, கண்ணீர் புகை பிரயோகம்

கொழும்பு, ஜூலை 31

அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர் திருத்தக் கொள்கையைக் கண்டித்து நேற்று நண்பகல் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலீஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நண்பகல் 12.00 மணி அளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களும், கொழும்பு பிரபல பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்களுமாக சுமார் 5ஆயிரம் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் சுலோக அட்டைகளைப் பெருமளவில் வைத்திருந்தனர். அரசுக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

பொலீஸார் நடத்திய தாக்குதலின் போது காயமடைந்த 26 மாணவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இச் சம்பவம் நிகழ்ந்த போது கோட்டை பகுதியில்

8 ஆம் பக்கம் பார்க்க)

## வினாத்தாள்கள் இன்று வருகின்றன

எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான முதல் தொகுதி வினாத்தாள்கள் இன்று விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன.

அடுத்தகட்ட வினாத்தாள்கள் பின்னர் எடுத்துவரப் படும்.

அதே நேரம் — வன்னி மாவட்டங்களுக்கான வினாத்தாள்களும் இன்று அங்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இப்பரீட்சைக்கான காகிதாதிகள் கடந்தவாரம் இங்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

## எதிர்ப்புகளைக் கண்டு பின்வாங்கமாட்டேன்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

"எந்த எதிர்ப்பு வந்தாலும் கல்விச் சீர்திருத்த யோசனைகளை அமுல் செய்தே தீருவேன்."

இப்படி கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பலதரப்பட்டவர்களின் ஆலோசனைகளையும் பெற்றே இந்த கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன எந்த எதிர்ப்பு வந்தாலும் இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்றும் அவர் கூறினார். (இ-3-164-173)

## புளியங்குளத்துக்குத் தெற்கே படையினர் - புலிகள் மோதல்

கொழும்பு, ஜூலை 31

புளியங்குளத்துக்கு தெற்கே பாதுகாப்பு அரண்களில் நிலை கொண்டிருக்கும் "வெற்றி உறுதி" துருப்பினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

படையினர் மோட்டார் பீரங்கிகள் சகிதம் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முரசுமோட்டைக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் குழு ஒன்றின் மீது சிறிய ஆயுதங்கள் கொண்டு நேற்று முன் தினம் காலை 7 மணியளவில் படையினர் தாக்குதல் [illegible]

இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு [illegible] தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சாமபல்தீவில் வர்த்தகர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஜூலை 31

விடுதலைப் புலிகளுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான மருந்து மற்றும் உணவுப் பொருள்களை வழங்கினார்கள் என்ற சந்தேகத்தில் சாம்பல் தீவில் மூன்று வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3-173-164)

## மாணவரை அனுப்ப முயற்சி

கொழும்பு மற்றும் பகுதிகளில் யாழ்ப்பாணம் வரக் காத்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள், ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் ஆகியோரை அவசரமாக விமானம் மூலம் அனுப்ப கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

'லயன் எயர்' விமான சேவை ஆரம்பித்துள்ளதையடுத்து, இவர்களை முன்னுரிமை அடிப்படையில் யாழ்ப்பாணம் அனுப்ப கொழும்பில் உள்ள யாழ் அரச அதி[illegible] [illegible] எடுத்துள்ளது. (இ-3-164-173)

## நயினாமடுவைக் கைப்பற்ற படையினர் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 31

நெடுங்கேணியில் நிலை கொண்டுள்ள படையினரும், புளியங்குளத்தில் நிலை கொண்டுள்ள படையினரும் இணைவதற்காக நயினாமடு, மதிய மடுப் பகுதியில் படை நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர் என படை வட்டாரங்கள் தெரிவித்தன.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைப் பலப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

கடந்த சில தினங்களாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### படையினர் தாக்கப்பட்டதை அடுத்து

## வாழைச்சேனைப் பகுதியில் 14 வீடுகளுக்குத் தீவைப்பு

கொழும்பு, ஜூலை 31

வாழைச்சேனைக்கு மேற்கேயுள்ள மயிலங்கரச்சை இராணுவ முகாம் மீது கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தாக்குதலையடுத்து நாசிவன், காயங்கேணி பகுதியில் 14 வீடுகள் கொளுத்தப்பட்டதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலையடுத்து இடம்பெற்ற துப்பாக்கி மற்றும் ஷெல் தாக்குதலால் சுப்பிரமணியம் (35 வயது) என்பவர் மரணமானார்.

அப்பகுதி பிரதேச செயலர் நேற்று பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மதிப்பீடுகளை மேற்கொண்டார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அரியரட்ணம் யோகரட்ணம்

**(ராஜமோகன்)**

மானிப்பாய் எளுமுள்ளியைப் பிறப்பிடமாகவும் செட்டிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அரியரட்ணத்தின் மூத்த மகன் 24-07-97 இல் செட்டிக்குளத்தில் காலமானார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 26-07-97 இல் செட்டிக்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜலட்சுமி-அரியரட்ணம்
(தாயார்)

கட்டுடை,
மானிப்பாய்.
(சி/1229)

## செல்லையா கிருஷ்ணபிள்ளை

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா கிருஷ்ணபிள்ளை 29-07-97 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-07-97 புதன்கிழமை நடைபெற்று முடிந்தன என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கி. யோகராசா
(மகன்)

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
(48687)

## திருமதி பொன்னம்மா தம்பிராசா

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தம்பிராசா (இளைப்பாறிய ஆசிரியை) 29 - 07 - 1997 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பிராசா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் மனைவியும், குணநாயகம்(சவுதி அரேபியா), இராசநாயகம் (தபாற் திணைக்கள பிரதேச நிர்வாக அலுவலகம், யாழ்ப்பாணம்), செல்வநாயகம் (ரெலிக்கொம், கொழும்பு), அருமைநாயகம் (கனடா), சிறிலங்காநாயகம் (கனடா), புனிதவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாதேவி (இளைப்பாறிய ஆசிரியை), தவகுருதேவி, நேசமலர், சுசீலா (கனடா), அஜித்தா (கனடா), பத்மகாந்தன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பிரியமிகுமாமியாரும், சுரேஜன்(கனடா), சுஜேதன் (கனடா), சகிலா (கனடா), சுகந்தன், சுதன், விஜிதன், யுரேக்கா, சசிதன், சர்மிளா, சுதர்சன், பிரதீப், பிரவினா, சன்தீப், சிந்தியா, சிரோனிக்கா டானிக்கா, சஞ்ஸீத், துஷிக்கா ஆகியோரின் பேர்த்தியும், குருசகியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30 – 07 – 1997 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் இடம் பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. பத்மகாந்தன்
(மருமகன்)

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(48675)

## சுந்தரம் இராசேந்திரம்

வல்வெட்டித்துறையில் பிறந்து மயிலிட்டியில் வசித்து தற்போது கற்கோவளத்தில் வசித்து வந்த சுந்தரம் இராசேந்திரம் காலமானார். இவர் தவபாக்கியத்தின் அன்புக்கணவரும், ராகவன் (சுவிஸ்) இராசலட்சுமி. கண்ணன் (சுவிஸ்) ஜெயலட்சுமி, கீதலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராஜா லங்கநாயகி (சுவிஸ்), கிருஸ்ணராஜ் ரவிதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜா, சஞ்சிகா, டிலக்ஸனா நிந்துயா (சுவிஸ்) விஜயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கற்கோவளத்தில் 28-7-97 இல் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இ. தவபாக்கியம்
[மனைவி]

வீரபத்திரர் கோயிலடி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.
(சி/1225)

## செல்லப்பா நடராசா

**(தச்சம்புலம்)**

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரான செல்லப்பா நடராசா 28 - 07 - 97 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் சத்தியமூர்த்தி ( கிளிநொச்சி ), புஸ்பமல்லிகா ஆகியோரின் தந்தையாரும், கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை), மகேஸ்வரி, ஜெகதாம்பிகை ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான அழகலிங்கம், ஐயாத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தம்பித்துரை, நாகலிங்கம், தங்கரத்தினம் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-07-97 இல் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. கணேசலிங்கம்
(மருமகன்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(48676)

## சேவை நலன். பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சிமெந்து ஆலை ஆளணி உத்தியோகத்தர் ஆ. சிவதர்மன் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதை முன்னிட்டு இன்று வியாழன் காலை 10.00 மணிக்கு யாழ். சிமெந்து கூட்டுத்தாபன காரியாலயத்தில் கூட்டுத்தாபன ஊழியர்களினால் சேவை நலன் பாராட்டுவிழா நடத்தப்படுகிறது. (இ)

## டிராக்டர் விபத்தில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம், கன்னாதிட்டிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற டிராக்டர் விபத்தில் ஒருவர் மரணமானார்.

தெல்லிப்பளை வீமன்காமத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதிப்பகுதியில் வசித்து வந்த தம்பையா செல்வநாயகம் (வயது 70) (முன்னாள் கைத்தொழில் போதனாசிரியர்) என்பவரே உயிரிழந்தவராவார்.

டிராக்டர் சில்லுக்குள் தலை நெரிந்து தலை சிதறிக் காணப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட அவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15-51)

## நியமனக் கடிதம்

அரசாங்க பொது எழுதுநர் சேவையின் 2 ஆம் வகுப்பு "ஆ" பிரிவுக்கு நியமனம் பெற்றுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேரையும் செயலகத்தில் தத்தமது நியமனக் கடிதங்களைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற 18 அதிபர்களுக்கான பிரிவுபசார விழா இன்று பகல் 11.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சிக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் சி. துரைராசா தலைமையில் நடைபெறும். (இ-117)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விவசாய பீடம்

## வாடகைக்கு வீடுகள்

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்கவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்குத் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தை அண்மிய பகுதியில் வாடகைக்கு வீடுகள் தேவைப்படுகின்றன. வாடகைக்குத் தர விரும்புவோர் வீடு பற்றிய விவரங்களையும் வாடகையையும் குறித்து யாழ். பல்கலைக் கழகப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
(சி/1230)

எமது புதிய வெளியீடு!
வினித் சுஹாசினி நடித்த
★ நந்தினி
ஒறிஜினல் வெளியீடு
★ சூரிய வம்சம் ★ வி.ஐ.பி.
★ ஒன்ஸ் மோர்
பிரதியின் விலை 350/-
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(48693)

## யாழ். மத்திய கல்லூரி
## 181 ஆவது நிறைவு விழா

**01-08-1997**

மத்தியின் மைந்தர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள்

**எமது 181 ஆவது நிறைவு விழா கொண்டாட்டம்**

தம்பர் ஞாபகார்த்த மண்டபத்தில் காலை 9 மணிக்கு (பழைய நேரம்) ஆரம்பமாகும் என்பதை பங்குபற்றுபவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- உப செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ் மத்திய கல்லூரி.
(சி/1227)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா செல்வநாயகம்

**(சிறு கைத்தொழில் ஆசிரியர்)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்பொழுது 345, கே கே.எஸ்.வீதி யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்வநாயகம் 30 - 07 - 1997 இல் அகால மரணமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், செல்வகுமாரி, உருத்திரகுமார் (பண்டாரவளை, புகையிரதப் பகுதி S. T. I.), சோதிராசா (சிறு கைத்தொழில் பகுதி கச்சேரி, யாழ்ப்பாணம்), வசந்தகுமார் (ஆசிரியர், தலவாக்கொல்லை), குசலகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்லையா சந்திரசேகரம் (மில் உரிமையாளர் கே. கே. எஸ். றோட்), திருமதி உருத்திரகுமார், விஜயலட்சுமி, சாரதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருந்ததி, மாலதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31- 7- 97 காலை 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. நாகம்மா
(மனைவி)

மனோகராச் சந்தி,
345, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(48694)

## சுப்பிரமணியம் பூரணம்

மூன்றாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூரணம் 30-07-97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (முன்னாள் ஆஸ்பத்திரி ஊழியர்) அன்புமனைவியும், காலஞ்சென்ற வல்லிபுரம்—பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், அருமைநாயகம், விமலநாதன் (தமூமு), யோகலிங்கம் (ராசு), கணேசலிங்கம், சிவலிங்கம், சிறிதரன் (தரன்), யோகேஸ்வரி, கமலேஸ்வரி (வவா), இந்திரேஸ்வரி (கிளி), வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி (கமலா), சாந்தாதேவி (தேவி), பசுமதி (றசி), இன்பவதி (கலா), சாந்தி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-07-97) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

16/4, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(48696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கர்கள் லெபனான் செல்ல தடையை நீக்குவது பற்றி ஆராய்வு

நியுயோர்க், ஜூலை 31
பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட லெபனான் உறுதியளிக்கும் பட்சத்தில் அந்த நாட்டுக்கு அமெரிக்கப் பிரஜைகள் விஜயம் செய்வதற்கு இருந்து வரும் தடையை நீக்குவது குறித்து ஆராயலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்டலின் ஆல்பிறைற் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஆல்பிறைற் விரைவில் இறுதித் தீர்வு ஒன்று எடுப்பார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க பிரஜைகள் லெபனானுக்குச் செல்வதற்கு கடந்த10 ஆண்டுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்ட தடையை அகற்றுவது குறித்து வெளியுறவு அமைச்சர் மார்டலின் ஆல்பிறைற் பரிசீலிப்பதாக வாஷிங்டனில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆண்டுகளில் லெபனானில் மேற்கு நாட்டவர்கள் எவரும் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்படவில்லை. அதனால், அத்தடையை அகற்றுவதற்கு ஆல்பிறைற் கருதுவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத்தடை அகற்றப்பட வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நெருக்குதல் அளித்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# லாலு பிரசாத் சரணடைந்தார்!



பட்னா, ஜூலை31
ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சியின் தலைவரும், பீஹாரின் முன்னாள் முதலமைச்சருமான லாலு பிரசாத் யாதவ் நேற்றுக் காலை சி. பி. ஐ விசேட நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

பலகோடி டொலர் பெறுமதியான கால் நடைத் தீவன ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லாலு சி. பி. ஐ சிறப்பு நீதிபதி எஸ். கே. லால் முன்னிலையில் நேற்றுக் காலை சரணடைந்ததாக பி. ரி. ஐ செய்தி தெரிவித்தது.

லாலு பிரசாத் யாதவ் சரணடைந்த நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிரடிப் படையின் மூன்று அணிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன.

கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காக அவர் தாக்கல் செய்திருந்த முன் பிணை மனுவை இந்திய உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து அவரைக் கைது செய்யுமாறு சி. பி. ஐ உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து நீதிமன்றத்தில் தாமாகவே சென்று சரணடையப் போவதாக லாலு நேற்று முன்தினம் இரவு பட்னாவில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

லாலு பிரசாத் யாதவ் சரணடைந்ததைத் தொடர்ந்து வன்செயல்கள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதால் பீஹார் மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

## மீண்டும் வீரப்பனைச் சந்திக்க 'நக்கீரன்' ஆசிரியர் பயணம்

புதுடில்லி, ஜூலை 31
சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் பேச்சுக்கள் நடத்த நக்கீரன் ஆசிரியர் கோபால் சென்னையிலிருந்து நேற்று புறப்பட்டார்.

வீரப்பன் பிடித்து வைத்துள்ள கர்நாடக வனத்துறை அலுவலகர்கள் 9 பேரையும் விடுவிப்பதற்காக— வீரப்பனுடன் பேச்சு நடத்துவதற்காக என தமிழக அரசின் பிரதிநிதியாக கோபால் இரண்டாவது தடவையாக வீரப்பனைச் சந்திக்கச் செல்கின்றார்.

ஒன்பது வனத்துறை அலுவலர்களையும் விடுவிக்க வீரப்பன் 10நாள் காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே.

## பலஸ்தீன நிர்வாகத்தில் ஊழல்கள், முறைகேடுகள்

ஜெருஸலேம், ஜூலை 31
பலஸ்தீன நிர்வாகத்தில் ஊழல்கள் குறித்து விசாரணை செய்துவரும் வழக்கறிஞர் குழு ஒன்று ஜனாதிபதி யஸிர் அரபாத்தின் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரையும் பதவியில் இருந்து விலகி விடுமாறு வலியுறுத்தியுள்ளது.

ஊழல் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் அமைச்சர்களில் குறைந்தது 2 பேரையாவது விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்று அந்தக் குழு கேட்டுள்ளது.

மேற்படி வழக்கறிஞர்கள் குழு பலஸ்தீன சட்டசபைக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கை ஒன்றில், அமைச்சரவையைக் கலைத்துவிட்டு தொழில்நுட்ப அறிவையும் ஏனைய தகைமைகளையும் கொண்ட புதிய அமைச்சரவை ஒன்றை நியமிக்குமாறு கோரியுள்ளது. (ஐ-5)

## முபாரக்குக்கு நேரு விருது

புதுடில்லி, ஜூலை 31
சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நட்புறவுக்கான ஜவகர்லால் நேரு விருது எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக்குக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# பொல்பொட்டின் வீடியோ காட்சி கம்போடியாவில் ஒளிபரப்பானது

நொம்பென், ஜூலை 31
கடந்த 18 ஆண்டுகளின் பின்னர் ''கெமரூச்'' தலைவர் பொல்பொட்டை லட்சக் கணக்கான கம்போடிய மக்கள் நேற்று முன்தினம் தொலைக் காட்சியில் பார்த்தனர்.

''கெமரூச்'' கெரில்லாக்களால் தலைவர் பொல்பொட் விசாரணைக்கு உட்படுத்தப்படும் வீடியோ காட்சி வெளியிடப்பட்டிருக்கிறது. நொம்பென் நகரில் அமைக்கப்பட்ட திரை ஒன்றில் இந்த வீடியோப் படம் காண்பிக்கப்பட்ட போது பல்லாயிரக்கணக்கானமக்கள் அதனைப் பார்க்கக் கூடியிருந்தனர்.

'பொல் பொட்' விசாரணைக்கு உட்படுத்தப்படும் காட்சியை அமெரிக்கப் பத்திரிகையாளர் நடேதாயர் படம்பிடித்துள்ளார்.

அமெரிக்க ரெலிவிஷனிலும் இக்காட்சி ஒளிபரப்பப்பட்டது. இளம் பச்சை நிறத்தினாலான பருத்தி சேட்டும், கறுப்பு நிற காற்சட்டையும் அணிந்த பொல்பொட் மிகவும் வயோதிபத் தோற்றத்தில் காணப்பட்டார்.

## உலக அரங்கில்

## மழை, மின்னல் காரணமாக அஸாத் காஷ்மீரில் 16 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஜூலை 31
பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர்ப்பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதாலும், பலத்த மழையினாலும் 16 பேர் உயிரிழந்தனர்.

காஷ்மீரின் தலைநகரான முஸாபராபாத்துக்கு வடகிழக்கே அமைந்துள்ள கிராமம் ஒன்றில் 8 பேர் மின்னல் தாக்கி மரணமானதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அதே பகுதியில் பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மேலும் 8 பேர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானின் மத்திய மாகாணமான பஞ்சாப்பில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக தாழ்ந்த பகுதிகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ஐ-5)

உ

பிராமண இளைஞர் சமாஜம்
புனரமைப்புக் கூட்டம்

இடம்:- உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயிலடி.
( ஐயாத்துரைக்குருக்கள் இல்லம் )
நாள்:- 02 - 08 - 1997 சனிக்கிழமை.
நேரம்:- பி. ப. 1. 30 மணி [ பழைய நேரம் ]

அனைத்து அந்தணப் பெருமக்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்!

(48645) ஷி கூட்ட அமைப்பாளர்கள்

## அல்ஜீரியாவில் 44 பேர் படுகொலை

அல்ஜியர்ஸ், ஜூலை 31
அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியர்ஸில் முஸ்லிம் அடிப்படைவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் குழுவினர் 44 பேரைப் படுகொலை செய்துள்ளனர். இறந்தோரில் பலர் சிறுவர்களாவர்.

மிதவாத முஸ்லிம் ஆட்சியாளர்களை எதிர்த்து தீவிர முஸ்லிம் அடிப்படைவாதிகள் அங்கு வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## மழை பெய்ய வேண்டி புளிய மரத்தில் தவம்!

### கர்நாடக கிராமவாசியின் முயற்சி

புதுடில்லி, ஜூலை 31
இந்தியாவில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கிராமவாசி ஒருவர் மழை வேண்டி புளியமரம் ஒன்றில் ஏறித் தவம் புரிந்து வருகிறார்.

ராமப்பா (வயது 55) என்னும் இக்கிராமவாசி முன்னர் மழை பெய்யவேண்டும் என ஆண்டவனிடம் கேட்டு 10 கிலோ மீற்றர் ஓடினார். பின்னர் ஓடிய தூரத்தை மீண்டும் பின்புறமாகப் பார்த்தபடி ஓடி முடித்தார். அத்துடன் புளியமரத்தில் ஏறித் தவம் இருந்து வருகிறார்.

இக் கிராமவாசிக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. இரண்டு மனைவிமாரும், 8 பிள்ளைகளும் உள்ளனர். இவரது கிராமத்தில் நீண்ட காலமாக மழை பெய்யாததால் பயிரிட முடியவில்லை.

தினமும் புளியம் இலையைச் சாப்பிட்டுக்கொண்டு நீர் அருந்திவிட்டு மரக்கிளையிலேயே அமர்ந்திருக்கிறார். மழை பெய்யாவிடில் இப்படியே இருந்து உயிர் துறப்பேன் என்று அவர் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவில் கடந்த மாதம் பரவலாக மழை பெய்தது. ஆனால் ராமப்பாவின் கிராமமான தூந்தூரில் ஒரு துளி மழை கூடப் பெய்யவில்லை. (ஐ)

31 ஆவது நாள் நினைவஞ்சலி

தாயின்மடியில்: 05—03—1982
இறைவன் அடியில்: 01—07—1997

செல்வி கஜேந்தினி யோகரத்தினம்
(யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகா வித்தியாலயம் — 10ஆம் ஆண்டு மாணவி)

வன்னிக்கு என்று போய்வழிமாறிப் போனதென்ன?
உன் செய்தி கேட்டு நாம்
துடியாய்த் துடிக்கின்றோம்.

பெரியம்மா குடும்பம்

நா. நாகேந்திரன்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

A/L 98
PHYSICS
Mr. ஸ்பெல்மன்
HEAT
ஆரம்பம்: 01 / 08
வெள்ளி 3. 00 மணி
A/L 99
PHYSICS
PURE/APP. ஆரம்பமாகிறது.
SHAMROCK
யா/ [illegible] வீதி,
(48644)

### வளி மாசடைந்ததால்

## சன்டியாகோ நகரில் பெரும் புகை மூட்டம்!

### பாடசாலைகள் மூடப்பட்டன

சன்டியாகோ, ஜூலை 31
வாகனங்கள் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக வெளியேறிய புகை காரணமாக சிலியின் சன்டியாகோ நகரில் பெரும் புகை மூட்டம் ஏற்பட்டிருக்கிறது.

மலைகளால் சூழப்பட்ட இந்த நகரில் வளி மிக மோசமாக மாசடைந்துள்ளது. வானில் புகை மூட்டம் தொடர்ந்து கவிந்து காணப்பட்டதால் நகரின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலைகள் இரண்டு நாள்கள் மூடப்பட்டதால் சுமார் 10 லட்சம் மாணவர்கள் வீடுகளில் தங்க வேண்டி ஏற்பட்டது.

மாசடைந்த வளியைச் சுவாசித்த நூற்றுக் கணக்கான சிறுவர்களும், வயோதிபர்களும் கடந்த வாரம் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

BANK OF CEYLON இலங்கை வங்கி

## தனது 58 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு

1-8-1997 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கும் 1-8 1997-க்கும், 31-8-1997-க்கும் இடைப்பட்ட காலத்தில் மணமுடிக்கும் மணமக்களுக்கும் வங்கியின் முதலீட்டிலேயே கணக்குகள் திறக்க **இலங்கை வங்கி** முன் வந்துள்ளது.

★ இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.

★ அருகாமையிலுள்ள இலங்கை வங்கிக் கிளையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

'இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்''

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி/1219)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 22 — 01 — 1920

இறப்பு: 01 — 07 — 1997

### அமரர் தீயோகு லூக்காஸ்

அன்புவழி ஆன்ம ஒளி பெருக வாழ்ந்தே
அனைவரதும் உள்ளத்தே குடிபுகுந்தீர்
என்புருக இல்லறத்தின் கடமையாற்றி
இனியார் இங்கினியா ரென்றெவரும் போற்ற
மன்னவன் போல் தலைநிமிர்ந்த தோற்ற மேற்ற
மனத்தாழ்ச்சி மாட்சிமையை மறப்போமோ நாம்
பொன்னுலகே சென்றீரென்றமைதி கொண்டே
பொங்குமுளத் துயர் சிந்தோம் எங்கள் செல்வா!

பிரிவால் நெஞ்சமுருகும்:
சகோதரன், மகன் மருமகன்,
உறவினர்.

''நசரேத்''
உடுவில்.

(48667)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உருவம்: 27 — 07 — 1943

அருவம்: 25 — 07 — 1995

### அமரர் செ. சண்முகநாதன்

(ஆசிரியர் யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

**திதி:- 31 - 07 - 1997**

எங்கள் தெய்வமே! கடமைகளை நன்றே செய்தீர்கள்: சுமைகளை நன்றே சுமந்தீர்கள்: இன்பம் அடைகின்ற வேளையில் எம்மைத் தவிக்க விட்டு சென்றீர்களே அப்பா! வழி தெரியாது தவிக்கின்றோம் நாம். தங்கள் நினைவின்றி வாழ முடியவில்லை; உங்கள் ஆத்ம சாந்தியே எமது பிரார்த்தனை.

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

இணுவில்.

(48679)

## சமய சந்நிதிகளில்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மண்டபத்தில் வாராந்தம் நடைபெறும் நிகழ்வுகளில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இசைச் சொற்பொழிவு இடம்பெறும். ''கணபதியும் கண்ணனும்'' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் ஆ.கதிரவேலு இசைச் சொற்பொழிவாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

தென்மராட்சி நாவடிைப் பிள்ளையார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. ''பகவான் நிகழ்த்திய அற்புதங்கள்'' என்ற தலைப்பில் திருமதி யூ. சண்முகநாதன் உரையாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெற்று வருகின்றது. எதிர்வரும் 8 ஆம் திகதி 45 ஆவது நாள் விசேட சங்காபிஷேகம் இடம் பெறும். (ஐ-100)

## 525 பேருக்கு ரூ. 5,000 கொடுப்பனவு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியேறிய 525 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவுகளை வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றைத் தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எக்ஸ். ஜே. செல்வநாயகம் தெரிவித்தார். (ஐ-111)

## ஆங்கில தின விழா

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆங்கில தின விழா அதிபர் ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) டீ.ஆர். அருமைநாயகம் கலந்து கொள்வார். (ஐ-30)

## விசேட அ. அட்டை விநியோகம்

பாசையூர் மேற்கு (ஜே-65) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் கிராம அலுவலரின் இல்லத்தில் வைத்து வழங்கப்படவிருப்பதாக கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ)

## குழந்தை தத்தெடுத்தல்

2—4 வயதுக்குட்பட்ட பெண் குழந்தையை சட்டரீதியாகத் தத்துக் கொடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

இல. 642,
மே/பா. ''உதயன்''
யாழ்ப்பாணம்.

(48647)

உ

## வில்லூன்றி புனித தீர்த்தம்
## ஆடி அமாவாசைப் பெருவிழா

**03 - 08 - 97 ஞாயிற்றுக்கிழமை**

**தீர்த்தோற்சவம்**

காலை 7.00 மணி வசந்தமண்டபப் பூசை

காலை 8.15 மணி தீர்த்தவாரி

**பிதிர்க் கடன்கள்** [ அமாவாசை தர்ப்பணம் ]

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்ததவுடன் பொது மக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலனசபை, வில்லூன்றி தேவஸ்தானம்
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.

வில்லூன்றி.
27-07-97.

(48665)

உ
குருவே துணை

## உயர்திரு. வே.முருகேசு சுவாமி அவர்களின்
## 5 ஆம் மாத குருபூசை

**01 - 08 - 97**

மேற்படி சுவாமி அவர்களின் 5 ஆம் மாத குருபூசை உரும்பிராயைச் சேர்ந்த புஸ்பநாதனின் அனுசரணையுடன் நாளை செல்வச்சந்நிதி முருகனின் அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் மகேஸ்வர பூசையுடன் நிறைவுறும். சுவாமி அவர்களின் அன்பர்கள் அடியார்கள் கலந்து குருபூசையைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

[48683]

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



### செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

(மூன்னாள் மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி)

மலர்வு: 20-10-1969

உதிர்வு: 31-07-1988

ஆண்டவன் உனையழைத்து
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எங்கள் துயர் — ஆயினும்
ஆண்டவர் இயேசுவின் வார்த்தையால்
அவனியில் நாம் வாழுகிறோம்:

''எக்காளம் தொனிக்கப்படும்; அப்பொழுது
மரித்தோர் அழிவில்லாதவர்களாய்
எழுந்திருப்பார்கள்''
1 கொரி. 15:52

உமது பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

இராமலிங்கம் வீதி,
உடுவில் கிழக்கு.

(கி/1224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவரிப் பாதுகாவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொழும்புத்துறை, ஜூலை 31

மதுவரிப் பாதுகாவலர் (Excise Guard) பதவிக்கான விண்ணப்பங்கள், கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் மீண்டும் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவித்தல்கள் 11. 07. 97 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகி உள்ளன.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பொருத்தமானவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

11. 07, 97 வர்த்தமானியில் மேற்படி பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இடம்பெறவில்லை என்றும்- இதுதொடர்பாக கடந்த வருடம் வெளியான வர்த்தமானி ஒன்றில் இந்த மாதிரி விண்ணப்பப்படிவம் பிரசுரமாகியுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

30. 8. 96 திகதிவெளியன அந்த வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய ஏற்கனவே இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்தினம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை ஆகும்.

வர்த்தமானியில் [illegible] வெளியான இது தொடர்பான மாதிரி விண்ணப்பப்படிவத்தை 'உதயன்' பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(ஐ - 5- 30)

# 'குமுதினி' படகு திருத்த வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்

நெடுந்தீவு ஜூலை 31

'குமுதினி' படகின் திருத்த வேலைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகும் எனத்தெரிய வருகிறது.

படகு திருத்த வேலைகளுக்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளக் கூடியதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளரும், ஒப்பந்த அடிப்படையில் வேலைகளைப் பொறுப்பேற்றுள்ள தனியார் நிறுவன தொழில் நுட்பவியலாளர்களும் நேற்று முன்தினம் குமுதினிப்படகைப் பார்வையிட்டனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் 'குமுதினிப்' படகைத் திருத்தி உடன் சேவைக்கு விடுமாறு கொழும்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையைப் பணித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ - 111)

## நாகர்கோயிலில் சிரமதானம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய சுற்றாடல் பகுதி கடந்த திங்களன்று சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

சிரமாதனம் மூலம் ஆலய சுற்றாடல் துப்புரவு செய்யப்பட்டு அருகில் இருந்த புதர்கள் வெட்டப்பட்டன. இத்துடன் ஆலயத்தின் குளமும் ஆழமாக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது.

(ஐ -36)

## சிலைகள் திறப்பு விழா

அண்மையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புனரமைப்பு செய்யப்பட்ட நான்கு பெரியார்களின் சிலைகளும் நாளை மறுதினம் சனிக்கிழமையன்று சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப் படவுள்ளன.

மகாத்மா காந்தி சிலை, ஔவையார் சிலை, திருவள்ளுவர் சிலை, சோமசுந்தரப் புலவர் சிலை ஆகியன யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தகர்களினால் புனரமைக்கப்பட்டு, வர்ணம் தீட்டப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளன. எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் இச்சிலைகள் சமயப் பெரியார்களினால் திறந்து வைக்கப்படவிருப்பதாக யாழ். வணிகர் சங்க செயலாளர் சி. நமசிவாயம் தெரிவித்தார்.

(ஐ-135)

# கடவுச் சீட்டு விண்ணப்பம் பெற பொதுமக்கள் அலைகின்றனர்

கடவுச் சீட்டு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் யாழ். செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் அலைந்து திரிகின்றனர்.

முன்னர் இப் படிவங்களை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மாதந்தோறும் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வந்தது. இவற்றை யாழ். செயலகம் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு விநியோகம் செய்து வந்தது.

தற்போது நீண்டகாலமாக இப்படிவங்களை இங்கு அனுப்பி வைக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வெளிநாடு செல்வதற்கு கடவுச் சீட்டுக்கு விண்ணப்பம் செய்வதற்கு மக்கள் இவ் வலுவலகங்களுக்கும் தனியார் கடைகளுக்கும் அலைந்து திரிகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் கடந்த 82 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 85 ஆம் ஆண்டு வரை சுமார் 40 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் யாழ். கடவுச் சீட்டு அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-100)

# யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனம் தனித்து இயங்க அனுமதி

## புதிதாக இயக்குநர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவன யாழ்ப்பாண பிராந்திய நிலையம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து பிரிந்து இனி தனித்துவமாக இயங்கும் அதன் இயக்குநராக ரி. இராஜரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஈ. பி. டி. பியின் யாழ். பணிமனையில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசாவை உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் சந்தித்தனர். இச்சந்திப்பின்போதே இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கான தனியான கட்டடத்தை குத்தகைக்குப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் —

பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத் திட்ட நிதி உதவி ஊடாக கணனி வசதிகள் செய்து தருவதாகவும் — நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்துள்ளார்.

(ஐ-5)

# ஆசிரியர் வகுப்பு- 1 பரீட்சைக்கான சில ஆலோசனைக் குறிப்புக்கள்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆசிரியர் வகுப்பு — 1 போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் நன்மை கருதி ஆசிரியர் வாண்மை, வழிகாட்டல் தொடர்பான முக்கிய அம்சங்களின் தொகுப்பு இங்கே பிரசுரமாகிறது.

ஒரு புதிய பாடசாலைக் கலாசாரம் வேண்டப்படுகிறது. இந்நோக்கிற்காக தொழில் வாண்மை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

★ தொழில் வாண்மைஎன்றால் என்ன? எண்ணக்கரு

★ ஆசிரியர்கள் தொழில் வாண்மை சமூகத்தில் ஏற்கப்படுகின்றதா?

★ ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்தியில் முழுமைபெற கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

★ ஆசிரியர்களது அறிவும், திறனும் முழுமை அடைவதன் அவசியம், ஆசிரியர்கள் நல்ல மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஒவ்வொரு ஆசிரியராலும் உணரப்படுகின்றதா?

தொழில் வாண்மைப் பண்புகள்:

● விசேட அறிவு 1 நுட்பங்களின் தொகுதி (The Main Specialized Knoledge and Professionalism)

● முறைசார் பயிற்சியும் அனுபவமும் (Formal Training and Experience)

● வாண்மையை ஒன்று கூட்டும் ஒழுங்கமைப்பு (An Organization To Espouse Profesionalism)

● நடத்தையில் வழிகாட்டலுக்கான ஒழுக்கக்கோவை (An Ethical Code For Quidence of Conduct)

● நிதிசார் வெகுமதிகளைக் கருதாது சேவைக் கடப்பாடுடையராதல் (A Commttment To Service Rather Than Monetary Rewards)

வாண்மை (உயர்தொழிற் தகைமை) என்பது யாது?

1983 இல் "பாக்" என்பவர் கருத்து:

அ) உயர்ந்த விசேட அறிவு நாலபந்த தொழில் சார் கடமைக்கு அவசியமான ஒசை முறையினை அறிந்திருத்தல்:

ஆ) ஒழுக்கக் கோவைக்கு உட்பட்டுப் பணிபுரிதல்.

இ) பயிற்சி, ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் மற்றும் முறைமை அடிப்படையில் பணிபுரியும் தீவிர குழு உயர்வு கொண்டிருத்தல்.

இயல்பு நிலை:-

★ உயர் தொழில் தகைமை நிலையை அடைய ஏதாவது ஒருங்கை நீண்ட கால உயர்கல்வியைப் பெற்றிருத்தல்:

★ வேண்டும்போது அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் திறனைப் பெற்றிருத்தல்.

★ தமது தொழில் சார்ந்த விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், தமது துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளும்திறன்.

★ தம் தொழில் சார்ந்த அமைப்புக்களைக் கட்டியெழுப்பும் திறன்.

ஆசிரிய வாண்மை கொண்டவர்கள் தம் தொழில் சார் விடயங்களில் தாம் விரும்புவதைச் செய்யத் தமக்குச் சுதந்திரம் இல்லை என்ற உணர்வினைக் கொண்டிருப்பர். ஆலை தமது தொழில் சார் நியமங்களின் அடிப்படையில் தமது, சகாக்களதும் தரத்தினைப் பேணக் கடமைப்பட்டுள்ளனர். தமது தொழில்சார் அறிவைப் பெருக்கவும், நவீன முறைகளைப் பின்பற்றி தமது தொழில் தகைமையை உயரிய மட்டத்தில் பேணவும் கடமைப்பட்டுள்ளனர். தமது கடமைகளைச் சரிவர விளங்கிக் கொண்டு அவற்றைச் சீரிய முறையில் நிறைவேற்றும் பொறுப்பும் அவர்களுக்குண்டு.

ஒழுக்கக்கோவை ஏன்?

★ மாணவர் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான தியாக உணர்வைப் பெற....

★ மக்கள் சமூகம் விரும்பும் நடத்தையை உருவாக்கிக் கொள்ள, மக்கள் ஊழியகை சேவை செய்ய தியாகஞ் செய்யவும், கடமையை நிறைவேற்றுவதில் ஆழ்ந்த அகன்ற பொறுப்புடன் ஈடுபட

★ தொழில் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் உற்சாகம் காட்ட

★ கல்வி அபிவிருத்தியின் மீதும், தனது தொழில் அபிவிருத்தியின் மீதும் சுய ஈடுபாடுகாட்ட

வகை கூறல்

★ வகை கூறல்—பொறுப்பேற்றல்.

★ ஆசிரியர் தனக்குள்ள பொறுப்புக்களை சரிவர ஏற்று, அதற்கான விளைவுகளை உணரும் தன்மை விலகிக் கொள்ள முடியாத மன உணர்வு பெறல்; சமூக மாற்றம், சமூக நீதி, நியாயங்கள், சமூக எதிர் பார்ப்பிற்கமைய தன்னைதயார்ப்படுத்தல்.

★ கலாசார பெறுமானங்கள், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் செயற்படும் திறன் பொறுப்பேற்கும் தன்மை இவற்றைப்பெறல்.

எண்ணக் கரு

★ பண்டைய சமூகங்களில் வழிகாட்டல் தேவைப்பட்டதா?

எளிமையான வாழ்க்கை முறை— இயல்பான குடும்ப அமைப்பு, சிக்கலில்லாத வாழ்வு, கூட்டு வாழ்வில் [illegible] குடும்பத்தலைவர்கள், மூத்தோர், சமயத்தலைவர்கள் முறையான வழிகாட்டலை வழங்கினர்.

★ வழிகாட்டலின் தேவை எவ்வாறு எழுந்தது;?

விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்ப விருத்தி, சிக்கலடைந்த வாழ்க்கை முறை' நிறைவு செய்ய முடியாத தேவைகள், சிதைவுகள் நிறைந்த குடும்ப சூழ்நிலை, பொருத்தமான கல்வி, தொழிலை தீர்மானிக்க முடியாத நிலை; இச் சிக்கல்களில் இருந்து விடுவித்து கல்வியை வழங்க வழிகாட்டல்தேவைப் படுகின்றது.

★ பண்டைய சமூகநிலையில்:

பாட மையமான கல்வி, குறிப்பிட்ட அறிவுப்பரப்புடன் சிறிய அளவிலான சமூக வாழ்க்கைக்குத் தயார் படுத்தல் நிலை இருந்தது தொழில் நோக்கு விரிவடையவில்லை. தனியாள் பற்றிய அக்கறை இருக்கவில்லை. தனியாளுக்கும் சிக்கல்கள் இல்லாத மன நிலை இருந்தது, கட்டுக் கோப்பான குடும்பம், எளிமையான வாழ்க்கை, இயல்பான வழிகாட்டல்கள் நிறைந்த சமூக அமைப்பு நிலவியது.

இன்று வாழ்க்கை மையமான பிள்ளை மையக்கல்வி, அறிவு செயற்றிறன், மனப்பாங்கைக் கொண்டு தொழில் நோக்கையும், வாழ்க்கை நோக்கையும் நிறைவு செய்ய கல்வி உதவுகிறது. எனினும் இந் நிலை பூரணமடையாமல் சிக்கல்கள் நிறைந்த, நிறைவேற்றமுடியாத தேவைகள்! அன்பு, அரவணைப்பு அற்ற நிலை. தனியாள்? வேறுபாடுகள் அதிகரித்துடன் பல்வேறு அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட மனம்.

1908 இல் பிராங் பாசன்— பொஸ்ரன் நகரில் தொழில் வழிகாட்டல் அமைப்பைத் தோற்றுவித்தார்.

1918 இல் ட்ருமன் ஹெல்லி 'பாடசாலையைப் புரிந்து கொள்ள, உரிய கல்வித்துறையைத் தேர்ந்தெடுக்க வழங்கப்படும் உதவியே வழிகாட்டல்' என்றார். இவ்வாறாக கல்வி என்பது வழிகாட்டலே, வழிகாட்டல் என்பது கல்வியே. வழிகாட்டல் என்பது இவ்விதம் ஒழுக வேண்டும் என்று கூறாது, முகாமைசெய்யாது, பொறுப்பேற்காது வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள வழி காட்டும்.

முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களின் விளைவாக கல்வி உலகில் உளவியல் நுழைந்த பின்னர் வழிகாட்டல் ஒரு பிணியாய்வுச் செயற்பாடாகக் கருதப்பட்டது. உடல் நோய்களைக் குணப்படுத்துதல் போல உள நோய்களையும் குணப்படுந்தலாம் என்ற எண்ணம் வளரலாயிற்று.

வழிகாட்டல் என்பது மாணவ வாழ்க்கையின் போது எல்லா வயது மட்டத்திலும் அவர்களின் கல்வி, ஆளுமை வளர்ச்சி, சமூக மன எழுச்சி வளர்ச்சி, தொழில் அனுபவங்கள் என்பவற்றின் விருத்திக்குத் துணை செய்யும் தொழிற்பாடாகும். இது இலங்கையில் 1982 இல் கல்வியமைச்சு — யொவுன்மித்திரா, தேசிய இளைஞர் சேவைமன்றம் ஆகியவை இணைந்து பரவலாக அறிமுகம் செய்யப்பட்டது. 1986 இல் பாடசாலை ஆலோசனைச் சேவை பல பாகங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பணிகள்:- கல்வி உளவியல் தொடர்பான சேவைகள், குடும்ப ஆலோசனை, தொழிலுக்கான வழிகாட்டல்கள்.

இவ் வழிகாட்டல் சேவையின் நோக்கங்கள்;

★ வழியைக்காண வெளிச்சம் கொடுப்பது போன்றது.

★ தீர்மானித்த வழியில் செல்லதைரியம் ஊட்டல்.

★ சுய நம்பிக்கையைக் கட்டி எழுப்புதல்.

★ மறைந்துள்ள சக்தியை வெளிக்கொணர்தல்.

★ உளவியல் குறைபாடுகளில் இருந்து விடுவித்தல்.

★ விசேட தேவைகளைக் கண்டறிந்து உதவுதல்.

★ மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல்.

மூலம்: கு. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள இரண்டாயிரம் கூரை ஒடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வில்லூன்றிப்பிள்ளையார் கோயில். யாழ்ப்பாணம். [48666]

நல்ல நிலையில் உள்ள மின்சார குக்கர் (லண்டன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. ஸ்ரீரங்கநாதன், 10/10, தாளையடி லேன், திருநெல்வேலி தெற்கு. [48681]

**தவறிவிட்டது**

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சு. விஜயலட்சுமிஎன்பவரது 695841620V இலக்க தேசிய அடையாள அட்டை 27-07-97 நல்லூருக்கும், முட்டமாவடிச்சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி கிராமிய வங்கியில் ஒப்படைக்கவும். [47353]

**திருமணசேவை**

விவாகப்பொருத்தம் பார்த்தல், காணி, வீடு வாங்க விற்க திருப்திகரமான சேவை. 2 வருட இடைவெளிக்குப் பின் ஆரம்பம். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் பி.ப 2 மணி வரை. தற்காலிக முகவரி: திருவிளங்கம், இல. 40/5, ரெம்பிள் றோட் லேன். [48657]

**இறைச்சிக்கோழி**

இறைச்சிக்கோழி (Broiler) மொத்தமாக விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு கழிவுடன் கொடுக்கப்படும். தொடர்பு: 35/2, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [48680]

**திருத்துதல்**

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

**ஆங்கிலம், கணிதம**

விசேடமாக (விடுதலைக்குள்) ஆண்டு 6 தொடக்கம் O/L வரை விசேட பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (48630)

**புத்தகப் பிரியர்களே!**

உங்கள் வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய பயன்மிகு நூல்களைப் படித்துப் பயன்பெற விஜயம் செய்யுங்கள்: ''லிங் லெண்டிங் லைப்ரறி'' 41, தபாலக வீதி, சாவகச்சேரி. தொடர்பு: லிங்லெண்டிங் லைப்ரறி, சாவகச்சேரி. [48401]

**BOSCO INSTITUTE**

25, றக்கா றோட்

இந்து நாகரிகம்
இந்து சமயம் ] 97

திரு. பத்மராஜா

இலவச கருத்தரங்கு

01 - 08 - 97 வெள்ளி

3—5 மணி

**99 புதிய பிரிவு**

ஆரம்பம்:- 02 - 08 - 97

10. 30—11. 30

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள் நடைபெறுகின்றன.

(48689)

# புலிகளின் நடமாட்டம் மிகக் குறைந்து விட்டது

## இந்திய இராணுவ அதிகாரி தகவல்

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் மிகவும் குறைந்துள்ளது என்று தென்மண்டல இராணுவத் தலைமை அதிகாரி ஆர்.எஸ். நாஹ்ரா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, ஆந்திரா, கோவா மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கான இராணுவத் தலைமை அதிகாரியான நாஹ்ரா சென்னையில் செய்தியாளரிடம் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பெற்றோல், மண்எண்ணெய், மருந்துப் பொருள்கள் என்பன சிறிய அளவிலேயே இலங்கைக்கு கடத்தப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரவு நேர திருட்டுச் சம்பவம்

செம்பியன் பற்று, ஜூலை31

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரவு நேர திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

கால்நடைகள், கடற்றொழில் உபகரணங்கள் என்பன இரவோடு இரவாக திருடப்படுகின்றன.

அண்மையில் செம்பியன் பற்றைச் சேர்ந்த ஒருவரது இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம் காணாமற் போய்விட்டது.

கடந்த திங்களன்று இரவு 11. 30 மணியளவில் மாமுனைப் பகுதியில் உள்ள வீட்டில் கட்டி நின்ற ஆட்டை திருட முயன்ற நபர் ஊர் மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார். (ஐ-36)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் V. M. K.**

தோற்றம்: 23-04-1913

மறைவு: 31-07-1991

மண்ணில் வாழ்ந்து மறைந்தாலும்
மனக் கண்ணில் இருந்து மறையவில்லை
மறக்காமல் உங்கள் நினைவதனை
மலரஞ்சலி தினம் செய்தாலும்
இந்நாள் என்றதும் எமையறியா
இதயம் ஏனோ வலிக்கிறதே?

உங்களைத் தினமும் பூஜிக்கும் நாங்கள் இந்த நாளில்
[illegible] யாக்குகின்றோம்.

சாவகச்சேரி. (48649) V. M. K. குடும்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உற்பத்தித்துறை அபிவிருத்தி

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சுய தொழில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த பொருட் அமைப்பு முன்வந்துள்ளது. அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமான பொருட் இது விடயத்தில் அக்கறை காட்டுவது வரவேற்கத்தக்கது.

குடாநாட்டை பழைய வடிவத்துக்கு அல்லது அதற்குப் பதிலான புதிய வடிவத்துக்குப் புனரமைக்க வேண்டிய தேவை உள்ளது. அரசாங்கமும் யாழ்ப்பாணத்தின் புனர்நிர்மாணத்துக்காக வெளிநாடுகளிடம் உதவிபெற உத்தேசித்திருக்கிறது.

ஆனால் புனர்நிர்மாணத்துக்கு முன்னுரிமை கொடுப்பது உகந்ததல்ல. மக்களின் அத்தியாவசிய தேவைகள், சேவைகளுடன் சம்பந்தப்பட்ட புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்படலாம். போரின் விளைவாகத் தமது நாளாந்த வாழ்க்கையை இழுத்துச் செல்ல முடியாமல் அவஸ்தைப்படும் வசதியற்றோருக்கு புனர்வாழ்வு அளிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

போரினாலும், இடம்பெயர்வினாலும் தொழில்களை இழந்து கஷ்டப்படுவோர் தமது வாழ்வை மீளமைக்க சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள், சிறு கைத்தொழில் திட்டங்கள் அவசியம். புனர்நிர்மாணத்தில் கை தொடுவதற்கு முன்னர் புனர்வாழ்வுக்கான சுயதொழில் திட்டங்களைப் பெருவாரியாக அறிமுகப்படுத்தவேண்டும்.

அந்த வகையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகத் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சி மிகவும் பொருத்தமானதாகும்.

புனர்வாழ்வுப் பணிகளுடன் சமாந்தரமாக — புனர்நிர்மாணத்துக்கு முன்னர் — அக்கறை செலுத்தப்படவேண்டிய முக்கிய விடயம் உற்பத்திப் பெருக்கம்.

இதுவரை குடாநாட்டின் உற்பத்தித்துறை விவசாயம், மீன்பிடி, சிறிய மட்டக்கைத்தொழில்கள் என்ற மூன்று பிரிவுகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவற்றினூடு மட்டும் குடாநாட்டின் உற்பத்தித்துறையை வளர்த்து வேலைவாய்ப்புக்களைப் பெருக்க முடியாது. ஆகையால் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கக் கூடிய புதிய துறைகளை இனங்காண வேண்டும்.

இதுவரை பொருளாதாரத்துக்கு ஊன்று கோல்களாக விளங்கிய விவசாயம், மீன்பிடி, சிறு மட்டக் கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்வதோடு, அவற்றில் புதிய தொழில் நுட்பங்களையும் விவசாயக் கைத்தொழில் போன்ற புதிய பிரிவுகளையும் அறிமுகப்படுத்தவும் வேண்டும்

இவ்வாறு செய்வதற்குப் பெரும் மூலதனமும் தொழில்நுட்ப அறிவும் அவசியம். அதற்கான திட்டமிடுதலும், பயிற்சியும் தேவை.

புனர்நிர்மாணம் தற்காலிகமாக வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம். ஆனால் உற்பத்தித்துறை அபிவிருத்தியும், நவீன தொழிற்றுறை அறிமுகமும் குடாநாட்டில் நிரந்தரமான வேலைவாய்ப்புப் பெருக்கத்துக்குப் பெரிய உதவும்.

# வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் நாளை முதல் மீளகுடியமர அனுமதி

## மிதிவெடி கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம் ஜூலை 31

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மல்லாகம் வடக்கு, அளவெட்டி வடக்கு, அளவெட்டி மத்தி, அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம், பன்னாலையில் ஒரு பகுதி, தெல்லிப்பழை கிழக்கில் ஒருபகுதி, துர்க்காபுரத்தில் ஒருபகுதி ஆகிய பிரிவுகளில் நாளை மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர்.

வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. ல. திலகநாயகம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்குப் பிரிவுகளுக்கும் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர்.

இப்பிரிவுகளில் நாளை மீளக்குடியமரச் செல்லும் மக்கள் தத்தம் கிராம சேவையாளர்களைச் சந்தித்து தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்றும்—

கிராம சேவையாளர்களால் நடத்தப்படும் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பங்கு பற்றி அறிவுறுத்தல்களைப் பெற்ற பின் குடியமரவேண்டும் என்றும்— அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இதற்கு முன்னோடியாக அப்பகுதி கிராம சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள் ஆகியோருக்கு மிதிவெடிகளில் இருந்து பாதுகாக்கும் நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று யாழ். மருத்துவ பீடத்தில் நடத்தப்பட்டது.

யாழ். செயலகம், யுனிசெவ் நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் டாக்டர் என். சிவராஜாவால் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. (இ-3)

## மத்தியஸ்தர் வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இல. 61 ஈச்சமோட்டைவீதியிலுள்ள மேற்படி மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் காலை 10 மணி முதல் நடைபெறும். (இ-4)

# இரவில் காணாமற்போனவர் 3 ஆம் நாள் சடலமாக மீட்பு

## புங்குடுதீவுப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

இரவு நேரம் காணாமற்போனவர் மூன்றாம் நாள் சடலமாக மீட்கப்பட்டார்.

புங்குடுதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசையா (65 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

கடந்த சனிக்கிழமை இரவு படுக்கைக்குச் சென்றவர் காணாமற்போய் இருந்தது மறுநாள் காலை தெரியவந்தது.

கடந்த திங்கட்கிழமை இவரது வீட்டில் இருந்து சுமார் 15 வீடுகள் தள்ளி ஆள்களில்லாத வீடு ஒன்றில் இருந்து இவரது சடலம் மீட்கப்பட்டது.

வீட்டினுள் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்தே அதனுள் சென்று பார்த்த போது வீட்டின் சாமி அறைக்குள் சாமித்தட்டின் கீழுள்ள அலுமாரிக்குள் சடலம் முடக்கி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

சடலம் ஊர்காவற்றுறைப் பொலீஸாரின் உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை மரண விசாரணையை அடுத்து நேற்று உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (இ-15-51)

## தமிழ் தட்டெழுத்தாளர் பதவி

# நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு செல்ல முடியாத நிலை

எதிர்வரும் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் தமிழ் தட்டெழுத்தாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட 41 பேரும் போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் சமுகமளிக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இப்பரீட்சையை வேறு திகதியில் நடத்த அல்லது யாழ்ப்பாணத்தில் நடத்த முயற்சி எடுக்கப்படுவதாக யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

# யாழ். குடா. ஆலயங்களில் ஆட்டுக்கடா பலியிடும் வேள்விகள்

நவாலி, ஜூலை 31

குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் மீண்டும் ஆட்டுக்கடா பலியிடும் வேள்விகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த சனியன்று கல்லுண்டாய் காத்தவராயர் ஆலயம், சித்தங்கேணியிலுள்ள ஓர் அம்மன் ஆலயம் என்பவற்றிலும் அதற்கு முதல் வாரம் பண்டத்தரிப்பு பிரான்பற்றிலுள்ள ஒரு வைரவர் ஆலயத்திலும் ஆடுகள் பலியிடப்பட்டுள்ளன. (ஐ-100)

# பாலியல் வல்லுறவுக்கு உள்ளான அராலி யுவதிக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 31

அராலியில் படையினர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட யுவதிக்கு சக படையினரால் ஒரு லட்சம் ரூபா சேகரித்து வழங்கப் பட்டிருப்பதாக 51 ஆவது படையணி அலுவலகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஜூலை 11 ஆம் திகதி தமது சக படையினரில் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட யுவதிக்கு அராலிப் பகுதி படைப்பிரிவைச் சேர்ந்த ஏனைய படையினர் ஒரு லட்சம் ரூபா சேகரித்து வழங்கி உள்ளனர்."

இந்தப்பணம் முழுவதும் வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதற்குரிய 'பாஸ்' புத்தகம் அந்த யுவதியின் பெற்றோர்களிடம் 513 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியால் வழங்கப்பட்டுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கடந்த சனியன்று இடம்பெற்ற

# கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலில் 4 படையினர் காயம்

கடந்த சனிக்கிழமை உடுவில் — மானிப்பாய் வீதியில் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் நான்கு படையினர் சிறிய காயங்களுக்கு உள்ளானதாக 51 ஆவது படையணி அலுவலகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இம்மாதம் 27 ஆம் திகதி காலை 9.50 மணி அளவில் உடுவிலில் இருந்து மானிப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினரின் வாகனங்களைத் திருத்த உதவும் வாகனம் புலிகளின் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளானது.

"இத்தாக்குதல் காரணமாக வாகனத்தின் கதவுக் கண்ணாடியும் மற்றும் சில பகுதிகளும் சேதம் அடைந்தன. நான்கு படையினர் சிறிய காயங்களுக்கு உள்ளானார்கள்.

"கிளைமோர் கண்ணிவெடியால் சேதமடைந்த இந்த வாகனம் படையினரின் வாகனங்களைத் திருத்த மட்டும் பயன்படுத்தப்பட்டு வரவில்லை. அரச திணைக்களங்களைச் சேர்ந்த வாகனங்கள் மற்றும் தனியார் வாகனம் ஆகியவற்றைத் திருத்தவும் பயன்படுத்தப்பட்டு வந்தது."

இப்படி தெரிவிக்கப்பட்டது

## தேங்காய் எடுக்க சென்றவர் சடலமாக மீட்பு

தேங்காய் எடுத்துவர காலையில் தோட்டத்துக்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று கொடிகாமம் பருத்தித்துறை சந்தியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 67) என்பவரே மரணமானவராவார்.

தினமும் தேங்காய் எடுத்துவர காலை 5.00 மணிக்கு தோட்டத்திற்குச் சென்று வருவதாகவும் நேற்று காலையில் அவ்வாறு சென்றவர் இடை வழியில் சடலமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## மாணவருக்கு மண்எண்ணெய்

யாழ். வின்ஸர் சந்தியிலுள்ள மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று முதல் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சார்த்திகளுக்கு தலா 3 லீற்றர் மண் எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

ஒகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைக் காண்பித்து இந்த 3 லீற்றர் மண்எண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## நாளை

**ஆடி 16**

வெள்ளிக்கிழமை

திதி: திரயோதசி
பிற்பகல் 12.27 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முற்பகல் 10.38 வரை.
சுபநேரம்: 6.03-7.33
ராகுகாலம்: 10.33-12.23
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 31

திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் 106 தபால் பொதிகள் நேற்று எடுத்துவரப்பட்டன.

இத்தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களுக்கான 23 தபால் பொதிகள் இங்கிருந்து இக்கப்பலில் நேற்று அனுப்பப்பட்டன. (இ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

சாவகச்சேரி அசெம்பிளி ஒவ் கோட் சபையினால் நடத்தப்பட்டு வரும் ரைனி ரொட்ஸ் கோணர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளி பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அசெம்பிளி ஒவ் கோட் சபையின் போதகர் ஜேசன் செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டிறிபேக் கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராஜா கலந்துகொள்வார்.

## சாயி சிந்தனை

உன்னைப்போலவே உணர்வுகளும், இயற்கை சுபாவங்களும், தூண்டுதல்களும் உடையவனாய், உன்னோடு வாழ்கிறவன் மனிதன். உன் சேவையை மனமுவந்து ஏற்று மகிழ்ந்து நன்றி பாராட்டவும் செய்கிறான் அவன். அப்படி உறவும் நட்புமாய் உன்னோடு வாழும் மனிதனுக்குச் சேவை செய்யாது, உன்னைப் போலன்றி, உன் அறிவுக்கும் புலனுக்கும் எட்டாதவனாய், மறைபொருட் சக்தியாய் உள்ள இறைவனுக்கு எப்படி உன்னால் சேவை செய்ய முடியும்?

மனிதனின் இதயத்திலே இறைவன் வீற்றிருக்கிறான். ஆகவே மானிட சேவை மூலமாக இறைவனுக்குப் பணி செய்ய உன்னைப் பழக்கப்படுத்திக் கொள். மனிதனுக்குச் செய்யும் சேவையானது இறைவனுக்கு இயற்றும் வழிபாடென்று திடமாக நம்பிக்கை கொள். பெய்யும் மழைக்கு ஒதுக்கிடம் தேடி உன் வீட்டுக்கு ஓடி வருபவரை வெளித் தெருவுக்குத் திருப்பி அனுப்புவது கொடிய குணம் என்றால் அது குறைந்த பட்சமான கூற்று. மற்றவர் படும் துன்பத்தைக் கண்டும் அதைத் துடைக்க உன்னால் இயலுமானவற்றைச் செய்யாதுவிடின் நீ மனிதன் என்று அழைக்கத் தகுதியற்றவனாவாய். தெய்வத் தன்மை வாய்ந்தவனாவதற்கு நீ விருப்பம் கொள்ளாவிட்டாலும் போகட்டும், மனிதனாக வாவது வாழ்வாயாக!

ஆதாரம்: Sathya sai speaks : Vol. VI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரந்தனை

## சின்னமடு மாதா திருவிழா

05 — 08 — 97

04-08-97 நற்கருணை ஆராதனை 4. 00 மணி

05-08-97 திருநாள் திருப்பலி 9 30 மணி
[புதிய நேரம்]

★ பஸ் நிலையத்தில் இருந்து பஸ் வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கோயில் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. உதவ விரும்புவோர் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

அருள் திரு. A. யேசுதாஸ்,
பங்குத்தந்தை, நாரந்தனை.

(48697)

## வெளிவந்துவிட்டது!

1997 ஓகஸ்ட் பரீட்சை எடுக்கவிருக்கும்
மாணவர்களுக்கான

### பொருளியல்

புறவய வினா — விடைப் பயிற்சி நூல்
மாதிரி
250 இற்கும் மேற்பட்ட வினாக்களையும்
விடைகளையும் உள்ளடக்கியுள்ளது.

ஆசிரியர் திரு. க. அருந்தவபாலன்
B. A. (Hons) Dip. In. Ed.

★ சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ★

(48690)

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

## "கற்பகம்"

## மாணவர் சஞ்சிகை வெளியீடு

இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 31-07-1997 வியாழன் நண்பகல் 12.30 மணி
வரவேற்புரை;- ஆசிரியர் திரு. க. ஆனந்தராசா (அன்னைதாசன்)
தலைமையுரை:- செல்வன் க. பிரசன்னா
வாழ்த்துரை:- அதிபர் திரு. அ. ஈஸ்வரநாதன்
வெளியீட்டுரை:- திரு. ஆ. ராஜேந்திரன் (கோட்டக்கல்வி அலுவலர், கோப்பாய்க் கோட்டம்)
மதிப்பீட்டுரை:- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
நன்றியுரை:- செல்வன் து. இளங்கீரன்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், பகுதித் தலைவர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

### கஜன் பந்தல் சேவையினர்

N. செல்வரத்தினம்

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

[48692]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



புவியரங்கப்
பிரவேசம்:
20 - 06 - 1947

விண்ணரங்கப்
பிரவேசம்:
28 - 01 - 1996

### செல்லர் செல்லையா
[துரை]

திதி: 31 - 07 - 97

அன்பிற்கு இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய் பாசமெனும் நீரூற்றி எமை அரவணைத்த தெய்வமே! மாதம் பன்னிரண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது! வற்றாத கண்ணீருடன் நாம் இங்கு வாழ்கின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
இராஜேஸ்வரி (மனைவி)
ரஜனி, யாழினி (பிள்ளைகள்)

கண்டி வீதி,
அரியாலை.

(சி/1231)

## விமான சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 31

கடந்த 14 ஆம் திகதி முதல் ஸ்தம்பிதம் அடைந்திருந்த யாழ் — கொழும்பு தனியார் பயணிகள் விமான சேவை நேற்று வழமைக்குத் திரும்பியது.

இன்று முதல் 2 விமான சேவைகள் இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (இ-3)

## ஆங்கிலதின போட்டிகள்

யாழ். கல்வி வலயம்2 பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கிலமொழி தின போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறும். (இ-152)

## பாடசாலைக்கு ரூ. 30 ஆயிரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

அச்சுவேலி சென் திரேஸா கல்லூரிக்குப்படையினர் சார்பில் ரூ 30 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அங்கு இடம்பெற்ற வைபவம் ஒன்றில் 51 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எல். பி. பலேகல்ல இந்த நிதியை வழங்கினார்.

511 ஆவது படைப் பிரிவின் தளபதி கேணல் பன்னுப்பிட்டிய தலைமையில் இந்த நிதி சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் பலேகல்ல இந்த நிதியை அன்பளிப்புச் செய்து அங்கு உரையும் நிகழ்த்தினார். (இ)

### மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரும் பதற்றம் நிலவியது. போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதற்கிடையில் கொழும்பில் உள்ள பாடசாலைகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு நேற்று அறிவித்தது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற அமைப்பு பாடசாலை மாணவர்களை மறியல் போராட்டத்தில் ஈடுபடுத்த முனைவதாகக் கிடைத்த தகவலையடுத்தே பாடசாலைகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21-164-173)

### இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பறந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1974 இல் கச்சதீவு தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இது மீறும் செயல் என்று இந்தியா தனது ஆட்சேபனையில் தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் கச்சதீவை ராணுவ நோக்கங்களுக்காக பயன் படுத்த முடியாது.

கச்சதீவுப் பகுதியில் படையினரை வைத்திருப்பது மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புலிகளின் போக்குவரத்தை கட்டுப்படுத்தலாம் என்று இலங்கை கருதுகிறது.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் சமீப காலங்களில் அதிகரித்துள்ளன.

இதற்கிடையில் கச்சதீவு இந்தியாவுக்கே உரியது என உத்தரவிடவேண்டும் என்று கோரி திராவிடக் கழகம் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுத் தாக்கல் செய்துள்ளது. (இ-3-164-173)

## "குட்வில் கைட்" பயணிகள் கப்[...] அவசரமாகத் திருத்தப்படுகிற[...]

திருகோணமலை, ஜூலை 31

திருகோணமலையில் தரித்து நிற்கும் 'குட்வில் கைட்' கப்பலில் அவசரமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாளைக்குள் வேலைகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுவதாக திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

திருத்த வேலைகள் முடிந்து சேவையில் ஈடுபடுத்த முடியும் என துறைமுக அதிகாரிகள் அனுமதி வழங்கும் பட்சத்தில், அக்கப்பலை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதே சமயம் திருகோணமலையில் இருந்து அகதிகளை காங்கேசன்துறைக்கு ஏற்றிச் செல்ல இருகப்பல்களை வாடகைக்குத் தருமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் கப்பல் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுள்ளார்.

ஸ்தம்பிதம் அடைந்துள்ள கப்பல் போக்குவரத்தைச் சீராக்க அத்தியாவசிய சேவைகள் நாயகமும், வடமா[...] மீள் குடியமர்வு புனர்வா[...] அதிகாரசபைத் தலை[...] சோமபால குணதிரவும் [...] மான முயற்சிகளை [...] கொண்டுள்ளதாகத் தெரி[...] க்கப்பட்டது.

(இ-3-164-150)

## சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை [...]

இந்திய மீனவர்களை இ[...] கைக் கடற்படையினர் [...] டுக்கொல்வதற்கு எதிர்ப்[...] தெரிவித்து தமிழ்மாநில கா[...] கிரஸ் கட்சியினர் சென்னை[...] யில் உள்ள இலங்கை துணைத்[...] தூதரகம் முன்பாக நேற்று[...] ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இது போன்ற கொலை[...] களை உடனடியாக நிறுத்த[...] வேண்டும் என்று கோரு[...] மகஜர் ஒன்றை 10 உறுப்[...] னர் கொண்ட குழு இலங்கை[...] துணைத்தூதுவரிடம் சமர்ப்[...] பித்தது.

(இ-3)

எமது இன்றைய புதிய வெளியீடு!

பிரகாஷ்ராஜ், சுகாசினி நடித்த
★ நந்தினி

விஜய், சிவாஜி நடித்த
★ ஒன்ஸ் மோர் (ORIGINAL)

அப்பாஸ், பிரபுதேவா நடித்த
★ வி. ஐ. பி. (ORIGINAL)

அர்ஜுன், ரோஜா நடித்த
★ அடிமைச்சங்கிலி (CD Print)

அடுத்த வெளியீடு...

அப்பாஸ், அஞ்சு, அரவிந் நடித்த
★ ஆசைத் தம்பி

### சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/1232)

யாழ்ப்பாண
மாநகர சபை

## பொது அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவகால 1997
துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையங்கள்

யாழ். மாநகரசபை காணிக்குள் அமையவுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன. கேள்விப்பத்திரங்களை நானாவித இறைவரிக்கிளையில் 5 — 8 — 97 பி. ப. 3 00 மணிக்கு முன் பெற்று விண்ணப்பிக்கவேண்டும். கேள்வி ஏற்றல் 6 — 8 — 97 நண்பகல் 12. 00 மணி வரை.

2. ஆலய சுற்றாடலில் தனியார் காணிக்குள் அமைக்கப்படவுள்ள தனிப்பட்ட துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பாக காணிச் சொந்தக்காரரின் சம்மதக்கடிதத்துடன் பாதுகாப்பு நிலையத்தின் விஸ்தீரணம் அடங்கிய மாதிரிப் படத்துடன் 6 — 8 — 97 க்கு முன் விண்ணப்பித்து அனுமதி பெறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1997 - 07 - 30

(சி/1228)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவே[...] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்[...] பார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [...] மனையில்31-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெ[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org